பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 06 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜி-7 உச்சிமாநாட்டிற்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

2. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இரண்டாயிரம் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளை திறக்க அரசு முடிவு செய்திருப்பதாக மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. அறிவியலும், தத்துவமும் மனித வாழ்வின் நிலையான உண்மை என்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

4. ஈரான் அரசு தொலைக்காட்சி நிறுவனம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

5. இங்கிலாந்து செல்லும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய கிரிக்கெட் அணியில், தீபேஷ் மற்றும் நமன் ஆகியோர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

கனடா பிரதமர் திரு. **Mark Carney**-ன் அழைப்பை ஏற்று அந்நாட்டுக்கு சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜி-7 உச்சிமாநாட்டிற்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுகள் நடத்துகிறார்.

மூன்று நாடுகளில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதற்கட்டமாக தமது சைப்ரஸ் பயணத்தை நிறைவு செய்து கனடா சென்றடைந்தார்.

கனடாவின் **Kananaskis** நகரில் இன்று நடைபெறும் ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்.

தொடர்ந்து 7வது முறையாக இந்த மாநாட்டில் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

ஜி-7 உச்சிமாநாட்டிற்கு இடையே பிரதமர் திரு. நரேந்திர மோடி பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

மேலும் சர்வதேச பாதுகாப்பு, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதுமைக் கண்டுபிடிப்புகள் தொடர்பான பல்வேறு விஷயங்கள் குறித்து அந்த நாடுகளின் தலைவர்களுடன் தமது கருத்துகளை பிரதமர் பகிர்ந்துகொள்வார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஃபிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி, கனடா ஆகிய நாடுகள் ஆண்டுதோறும் சந்தித்து உலகளாவிய பொருளாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதித்து வருகின்றன.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை, நீதியின் அடிப்படையில் நடத்தப்பட்டது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் **Pachmarhi**-யில் நடைபெறும் பிஜேபியினருக்கான பயிற்சி முகாமில் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து இந்திய பாதுகாப்புப் படையினர் நடத்திய ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலைக் குறிப்பிட்டுப் பேசினார்.

நம்மீது தாக்குதல் தொடுத்தால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிரி நாட்டை ஆத்திரமூட்டும் வகையில் நடத்தப்பட்ட தாக்குதல் ஆபரேஷன் சிந்தூர் அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த முகாமில் பங்கேற்றுள்ள பிஜேபியினர், ஜனநாயகத்திற்கு உட்பட்டு தங்களின் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இரண்டாயிரம் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளை திறக்க அரசு முடிவு செய்திருப்பதாக மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இந்த பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்படும் என்று கூறினார்.

இதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் 22 லட்சம் ஓட்டுநர்கள் தேவை என்ற நிலையில் திறன்மிக்க ஓட்டுநர்கள் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் இந்த பயிற்சிப் பள்ளிகளின் சேவை இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

சாலை விபத்துக்களை குறைப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும், மக்கள் போக்குவரத்து விதிகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றும் திரு. நிதின் கட்கரி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அறிவியலும், தத்துவமும் மனித வாழ்வின் நிலையான உண்மைகள் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியா பண்டைக்காலம் முதலே நாகரிகத்தில் சிறந்து விளங்கி வருவதாகக் கூறினார்.

உலகின் பல நாடுகள் நாகரிகத்தில் மேம்பட்டிருந்தபோதிலும் அந்த நாடுகள் அதனை தொடர்ந்து பின்பற்றவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவைப் பொறுத்தவரை எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டு பாரம்பரியத்தை தொடர்ந்து கடைபிடித்து வருவதாக திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

யோகாசனம் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யோகாசனம் மேற்கொள்வதால் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று தமிழகத்தின் சென்னை தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் டாக்டர் திருமதி பேச்சியம்மாள் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Dhanasekar – 40 sec)**

<<<<>>>>

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக, ஈரான் அரசு தொலைக்காட்சி நிறுவனம் மீது இஸ்ரேல் படைகள் அதிரடி தாக்குதலை நடத்தியுள்ளன.

ஈரான் - இஸ்ரேல் இடையேயான போர் தொடங்கப்பட்டு 4 நாட்களைக் கடந்துள்ள நிலையில், டெல்அவிவ் மற்றும் ஹைஃபா நகரில் ஈரான் படைகள் ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதில் ஏராளமான கட்டிடங்களும், வீடுகளும் சேதமடைந்திருப்பதுடன், பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர்.

ஈரானின் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேலும், டெஹ்ரான் உள்ளிட்ட நகரங்களைக் குறிவைத்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அரசு தொலைக்காட்சி ஒளிபரப்பு நடைபெற்ற நேரத்தில் இஸ்ரேல் படைகள் தாக்குதலை நடத்தியதகாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே வளைகுடா நாடுகளில் இருந்து போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜி-7 உச்சிமாநாடு தொடங்க உள்ள நிலையில், கத்தார், சவுதி அரேபியா, ஓமன் ஆகிய நாடுகள் உடனடியாக சண்டை நிறுத்தத்தை அறிவிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பிடம் வலியுறுத்த வேண்டும் என ஈரான் கேட்டுக்கொண்டுள்ளது.

இதையடுத்து டெஹ்ரான், வாஷிங்டன் மற்றும் பிற நாடுகளின் தலைநகரங்களில் போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக துபாயில் இருந்து எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்திய அரசின் புள்ளியியல் துறை மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தமிழகத்தின் தருமபுரியில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக பள்ளி வளாகங்களில் மரக் கன்றுகள் நடப்பட்டதாக தருமபுரி துணை மண்டல அலுவலகத்தின் மூத்த புள்ளியியல் அதிகாரி திரு. மதிவாணன் தெரிவித்தார்.

**(Voice Byte – Mathivanan – 58 sec)**

<<<<>>>>

வர்த்தக நிலக்கரி சுரங்கங்களுக்கான 12வது சுற்று ஏலம் இன்று தொடங்கியுள்ளது.

ஏலத்தை எடுப்போரிடமிருந்து அதிக வரவேற்பு கிடைத்துள்ளதால் ஏற்கனவே 22 நிலச்சரிச் சுரங்கங்களில் 11 சுரங்கங்களுக்கு ஏல நிறுவனங்கள் போட்டியிட்டுள்ளதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இணையதளம் மூலமான ஏல நடைமுறை தொடங்கியிருப்பதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலை நிதி நடவடிக்கைகளுக்கான பிரத்யேக படையான **FATF** கண்டித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், நிதியுதவி இல்லாமல் இதுபோன்ற தாக்குதல்களை நடத்தியிருக்க முடியாது என்று கூறியுள்ளது.

தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்போருக்கு நிதி வழங்கும் நடவடிக்கைகளை உலக நாடுகள் இணைந்து தடுக்க வேண்டியது அவசியம் என்றும் அந்த அமைப்பின் தலைவர் **Elisa De Anda Madadrazo** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கர்நாடகா, கொங்கன் மற்றும் கோவா பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவின் சில பகுதிகள், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், மகாராஷ்டிரா, ஒடிசா, சத்தீஸ்கட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் கன முதல் மிக கனமழை வரை அடுத்த 2 நாட்களுக்கு பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஹரியானா, பஞ்சாப், உத்தரப்பிரதேச மாநிலங்களில் வரும் வெள்ளிக்கிழமை வரை லேசானது முதல் மிதமானது வரையான மழையுடன் புழுதிக்காற்றும் வீச வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

இங்கிலாந்து செல்லும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய கிரிக்கெட் அணியில், தீபேஷ் மற்றும் நமன் ஆகியோர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய அணியில் இடம்பெற்றிருந்த ஆதித்ய ராணா மற்றும் கிலன் பட்டேல் ஆகியோர் காயம் காரணமாக போட்டியில் இடம்பெறவில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

-------------

ஹாக்கி இந்தியா மாஸ்டர்ஸ் மகளிர் கோப்பைக்கான போட்டிகள் சென்னையில் நாளை தொடங்குகின்றன.

இந்த ஆண்டு முதல் முறையாக தொடங்கும் இப்போட்டிகள் வரும் 27ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

8 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் ஏ பிரிவில் ஹிமாச்சலப்பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, கேரளா அணிகளும், பி பிரிவில் ஒடிசா, ஹரியானா, பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் போட்டியில் சேப்பாக் அணி 8 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சேலத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய சேப்பாக்கம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 180 ரன் எடுத்தது.

181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய திண்டுக்கல் அணி 20 ஓவரில் 172 ரன் மட்டுமே எடுத்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் கோவை அணி, திருச்சி அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**